**செ.வெ.எண்: 27** **நாள்: 14.03.2021**

**கரூர் மாவட்டம்**

**பத்திரிக்கைச் செய்தி**

எதிர்வரும் **06.04.2021–**ஆம் தேதியன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் **2021–** ல் அனைத்து வாக்காளர்களும், வாக்காளர் அடையாள அட்டையை (EPIC) ஆளறி ஆவணமாக காண்பித்து வாக்களிக்கலாம் என்றும், அவ்வாறு வாக்காளர் அடையாள அட்டையை (EPIC) காண்பிக்க இயலாத வாக்காளர்கள் கீழ்க்கண்டுள்ள **11** ஆவணங்களில் ஏதேனும் ஒரு ஆவணத்தை ஆளறி ஆவணமாக காண்பித்து வாக்களிக்கலாம் என இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, வாக்குப்பதிவு நாளன்று வாக்காளர்கள் கீழ்க்கண்ட **11** ஆவணங்களை ஆளறி ஆவணமாக பயன்படுத்தி வாக்களிக்குமாறு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.சு.மலர்விழி, இ.ஆ.ப., தெரிவிக்கிறார்.

1. ஆதார் அட்டை,
2. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அட்டை,
3. வங்கி / அஞ்சலக கணக்குப் புத்தகங்கள் (புகைப்படத்துடன் கூடிய),
4. தொழிலாளர் நல அமைச்சக திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு ஸ்மார்ட் அட்டை,
5. ஓட்டுநர் உரிமம்,
6. நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN Card),
7. தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட ஸ்மார்ட் அட்டை,
8. இந்திய கடவுச்சீட்டு,
9. புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம்,
10. மத்திய / மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்களால் / வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களால் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள்,
11. பாராளுமன்ற / சட்டமன்ற / சட்ட மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள லுவலக அடையாள அட்டை.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்**